லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகள் மற்றும் உபாயக் கற்கைகள் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 32 ஆம் இலக்க உபாயக் கற்கைகள் தொடர்பான இலங்கை நிறுவக அதிகாரச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2000 இன் 45 ஆம் இலக்க உபாயக் கற்கைகள் தொடர்பான இலங்கை நிறுவக அதிகாரச் சட்டத்தின் 10 (3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகள் மற்றும் உபாயக் கற்கைகள் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

அரச மானியங்களைக் கணக்குகளில் எடுப்பதற்கான கணக்கீட்டுக்கொள்கை ஒன்று நிறுவகத்தால் இனங்காணப்பட்டிராத போதிலும் மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 5,500,000 தொகையான அரச மூலதன மானியமானது நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமாகக் கணக்கிடப்பட்டிருந்து.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகள் மற்றும் உபாயக் கற்கைகள் நிறுவகத்தின் தாபித்தல் தொடர்பான 2006 சனவரி 24 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் இல අමප/06/0202/214/003 பிரிவு (அ) பிரகாரம் அரச காணிகள் சட்டத்தின் கீழ் மதிப்பிற்குரிய சனாதிபதிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை நடைமுறைப் படுத்துவதன் மூலம் இல 24, ஹோட்டன் இடம், கொழும்பு 7 இல் அமைந்துள்ள சொத்தின் உரிமை நிறுவகத்திற்கு மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் மீளாய்வாண்டின் இறுதிவரை சொத்தை வாங்குவதற்கோ மற்றும் அதன் பெறுமதியை கணக்குகளில் எடுப்பதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை சொத்தின் முன்னேற்றத்திற்காகச் செலவிடப்பட்ட ரூபா 3,189,193 ஆன தொகை மட்டுமே கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பண்டாரநாயக்க சர்வதேச பயிற்சி நிறுவனத்தின் நூல் நிலையத்திற்கு 2016 ஆம் ஆண்டில் நன்கொடையாகப் பெறப்பட்ட எழுபத்தொரு புத்தகங்களானது பெறுமதியிடப்பட்டுக் கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது நிறுவனத்தின் வரியானது ரூபா 363,440 ஆன தொகையாக மதிப்பிடப்பட்டிருந்தபோதிலும் செலுத்திய தொகையான ரூபா 90,860 மட்டுமே நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் செலுத்த வேண்டிய தொகையான ரூபா 272,580 ஆனது கணக்குகளில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்.**

2011 ஆம் ஆண்டிலிருந்து அட்டுறு செலவினமாக முன் கொண்டுவரப்பட்ட பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்குச் செலுத்தவேண்டிய ரூபா 6,744,288 தொகை, 2014 ஆம் ஆண்டில் அட்டுறு உபசரிப்புச் செலவினம் ரூபா 62,000 ஆன தொகை, மற்றும் நிறுவகத்தின் அட்டுறு செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுக் கட்டணம் ரூபா 150,000 என்பவற்றை மீளாய்வாண்டில் போதும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை.**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிறுவகத்தின் ரூபா 1,918,680 பெறுமதியான கணனி உதிரிப்பாகங்கள் தொடர்பாகவும் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச பயிற்சி நிறுவனத்தின் வேறுபடுத்தி இனங்காண முடியாத பெறுமதியான கணனி உதிரிப்பாகங்கள் தொடர்பாகவும் கணனிப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 9.3.1 ஆம் பந்தி | நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு உரிய அமைச்சினதும் திறைசேரியினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க்ப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதியச் சுற்றறிக்கை 3.2 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போது நிறுவகம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவகத்தினதும் வருடாந்த இருப்புக் கணிப்பீடு நடாத்தப்படாததுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் நிதிவிளைவுகள் ரூபா 7,797,868 மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 8,490,821 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 692,953 ஆன குறைவடைவொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது வட்டி மற்றும் வாடகைச் செலவுகள் ரூபா 3,587,768 ஆல் அதிகரித்தமை மற்றும் வழங்கல், நுகர்வு மற்றும் ஏனைய செலவுகள் ரூபா 11,735,000 ஆல் குறைவடைந்தமை இடம்பெற்றிருந்த போதிலும் பதவியணியினர் செலவினம் ரூபா 5,863,072 ஆல் அதிகரித்தமை மற்றும் பாடநெறிக்கட்டண வருமானம் ரூபா 10,430,644 ஆல் குறைவடைந்தமை என்பன இக்குறைபாட்டிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது 2012 ஆம் ஆண்டின் ரூபா 3,367,328 தொகையான மிகை 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,691,956 ஆகக் குறைவடைந்த போதிலும் 2016 ஆம் ஆண்டு வரை நிதி விளைவுகளில் திரும்பவும் தொடர்ச்சியான முன்னேற்றம் காணப்பட்டது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறைச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கருத்திற் கொள்ளும்போது 2012 ஆம் ஆண்டின்போது ரூபா 10,584,430 ஆன நிறுவகத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின்போது ரூபா 22,745,608 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2006 இன் 32 ஆம் இலக்க உபாயக் கற்கைகள் தொடர்பான இலங்கை நிறுவக (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு இருந்தன.

- அரச பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, சட்டம், பொருளியல், கலாசார தொடர்புகள், விவசாயம் மற்றும் சுற்றாடலுக்குரிய தகவல்கள் உட்பட சர்வதேச தொடர்புகள் மற்றும் உபாய கற்கைகளுக்குரிய தேசிய கொள்கைகளை தயாரித்தல் கட்டமைப்பதற்காக தகவல் மற்றும் தரவுகளை அரசிற்கு வழங்குதல்.

- உபாய வழிக் கற்கைகள் மற்றும் சர்வதேச தொடர்புகளை மேம்படுத்தும் ஆராய்ச்சிகளுக்கும் கற்கைகளுக்கும் மானியங்களை வழங்குதல் மற்றும் அதனை பொறுப்பேற்கும் நபர்களுக்கு பயிற்சியளித்தல்.

- இலங்கைக்கு பொருத்தமான உபாய கற்கைகள் மற்றும் சர்வதேச தொடர்புகள் தொடர்பாக கலந்துரையாடல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பிடுவதற்காக பின்புலமொன்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக வலயத்திலும் சர்வதேச ரீதியிலும் ஒன்றிணைந்த ஆய்வுகள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல்.

- உபாய வழிக் கற்கைகள் மற்றும் சர்வதேச தொடர்புகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள நூலகமொன்று உட்பட தகவல்கள் களஞ்சியமொன்றை உருவாக்குதல். விடயப்பரப்பிற்கு எடுக்கும் விடயங்களுக்குரிய பருவ சஞ்சிகைகள் மற்றும் கடிதங்களை வெளியிடல்.

- இலங்கை உட்பட ஏனைய நாடுகளிலும் சமமான நோக்கங்களுடன் கூடிய நபர்கள், அமைப்புகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்புகள் மற்றும் நட்பினை பேணிச்செல்லல்.

- இராஜதந்திர நடவடிக்கைகளுக்காக சர்வதேச தொடர்புகள் மற்றும் நிறுவகத்தினால் பொருத்தமானதென கருதப்படும் ஏனைய உரிய துறை தொடர்பாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

மேற்குறித்த நோக்கங்களை அடைதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேலே கூறப்பட்ட நோக்கங்களை அடைவதற்கான பௌதீக இலக்குகள் நிறுவகத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டிருக்கவில்லை. ஆயினும் அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிறுவகத்தினால் மீளாய்வாண்டின்போது தந்திரோபாயக் கற்கைகள் மற்றும் சர்வதேச தொடர்புகள் தொடர்பான 12 விரிவுரைகள் மற்றும் 06 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் விடயப்பரப்பிற்கு எடுக்கும் விடயங்களுக்குரிய 04 பருவ சஞ்சிகைகள் மற்றும் கடிதங்கள் மாத்திரமே நிறுவனத்தினால் வெளியிடப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரச் சட்டத்தின் பிரகாரம், நிறுவகமானது பல் ஒழுக்காற்று ஆய்வு நிறுவகமாகத் தொழிற்பட வேண்டுமாயினும் ஆய்வுகள் சம்பந்தமாக ஒரு செய்கைத்தாள் (working paper) மட்டுமே 2016 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

(இ) அதிகாரச் சட்டத்தின 10 (உ) பிரிவின் பிரகாரம் பண்டாரநாயக்க சர்வதேச பயிற்சி நிறுவகத்தின் இலக்கொன்றாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஏனைய கல்விப் பாடநெறிகள் நடாத்துவதற்குப் பொறுப்பாக நிறுவகத்தின் பிரிவொன்றாக செயற்படுத்த வேண்டியதுடன் அவ்வாறு செயற்படுத்துகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய கற்கை பாடநெறிகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட 08 கற்கை நிகழ்ச்சித் திட்டங்களில் 02 நிகழ்ச்சித் திட்டங்கள் மட்டுமே நடாத்தப்பட்டிருந்ததுடன் மற்றும் திட்டமிடப்படாத ஒரு பயிற்சி நிகழ்ச்சித் திட்டமும் நடாத்தப்பட்டிருந்தது.

(ii) இராஜதந்திர மற்றும் சர்வதேச தொடர்புகள் தொடர்பான டிப்ளோமா கற்கை நெறிக்காக 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை முறையே 174, 281 மற்றும் 299 ஆக இருந்ததுடன் கற்கை நெறியை திருப்திகரமாகப் பூரணப்படுத்திய மாணவர்களின் எண்ணிக்கை இவ்வாண்டுகளில் முறையே 124, 170, மற்றும் 152 ஆக இருந்தது. இதன் பிரகாரம் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கையில் முறையே 71 சதவீதம், 60 சதவீதம் மற்றும் 50 சதவீதமான குறைவடைவொன்று காட்டப்பட்டிருந்தது.

(iii) 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவகத்தின் கற்கை நெறி வருமானமானது 2016 ஆம் ஆண்டில் 54 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அமைச்சினால் ஒழுக்கப்பட்ட கற்கை நெறிகளின் எண்ணிக்கை குறைவடைந்தமையானது கற்கை நெறி வருமானம் குறைவடைந்தமையில் பாதிப்புச் செலுத்தியதுடன் இவ்வெண்ணிக்கையை முன்னேற்றுவதில் கவனம் கோரப்படாமை அவதானிக்கப்பட்டது.

**4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

2015 திசெம்பர் 31 இல் நடாத்தப்பட்ட இருப்புக் கணிப்பீட்டின்படி நிறுவகத்தின் 12 வகையான பொருட்கள் விற்பனை செய்வதற்குச் சிபாரிசு செய்யப்பட்டிருந்நபோதும் கணக்காய்வுத் திகதியான 2017 ஆகஸ்ட் 1 வரை அவற்றை விற்பனை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் நிறுவகத்தின் கட்டிடப்பகுதிக்குள் நிரப்பப்பட்டிருந்தது.

**5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல் நடவடிக்கைத்திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் தரவுகளை உள்ளடக்கியதான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை

**5.2 கொள்வனவுத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் (ஈ) பிரகாரம் லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவகத்தினால் மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 ஆண்டறிக்கையை சமர்ப்பித்தல்**

2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதிக்குரிய ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள் பலவீனங்கள் அவ்வப்போது நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படவேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | பாடநெறிகளுக்காக மாணவர்களை சேர்த்தல் | சான்றிதழ்களின் பிரதிகள் அல்லது சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் தகைமையை உறுதிப்படுத்தும் இதர ஆவணங்களை வைத்துக்கொள்ளாமை. |
| (ஆ) | புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பராமரிப்பு | இரண்டு நிறுவனங்களின் ரூபா 19,081,940 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பராமரிக்கப்படாமை. |